# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 12 புதன்கிழமை 26.06.2024 கதிர் 282









# ஆசிரியர், அதிபர்கள் ஒன்றிணைந்து கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம்! பொலிஸாரால் கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைப் பிரயோகம் முன்னெடுப்பு

## தாக்குதலைக் கண்டித்து நாளையும் போராட்டத்துக்கு அழைப்பு

கொழும்பு, கோட்டை புகையிரத நிலையத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் சங்க உறுப்பினர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகங்களை மேற்கொண்டிருந்தனர்.

இதன் காரணமாக கொழும்பு கோட்டை பகுதி மற்றும் ஜனாதிபதி செயலகப் பகுதியில் பெரும் பதற்றமும் ஏற்பட்டிருந்தது.

பல கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள், பொலிஸாரின் தடையை உடைத்து லோட்டஸ் வீதியால் பேரணியை முன்னெடுக்க முயற்சித்திருந்தனர். 2➤

## மக்கள் ஆதரவை திரட்ட முடியாத சஜித், ரணில், மஹிந்த தரப்பினர் தேசிய மக்கள் சக்தியின் மீது அவதூறுகளை பரப்பி வருகின்றனர்

### ராஜபக்ஷ தரப்பினர் சிதறுண்டுள்ளனர் என்கிறார் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா



திசைகாட்டியின் அரசியல் செயல்பாடுகள் பற்றி கொள்கை ரீதியான வாதங்களை முன்வைக்க முடியாத சில தரப்பினர் அவதூறுகள், பொய்கள் மற்றும் திரிபுபடுத்திய பேச்சுக்கள் மூலம் சில தவறான அணுகுமுறைகளை கையாண்டு வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் 2➤

## இந்த அரசாங்கமும் ஊழில் சளைத்ததல்ல! யாழில் ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு




கடந்த அரசாங்கத்தை போன்று தற்போதுள்ள அரசாங்கமும் ஊழல் செய்வதில் சளைத்தவர்கள் அல்ல என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப செயலாளர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சங்கததின் உப செயலாளர் தீபன் திலீசனின் ஊடக சந்திப்பு இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. 2➤

## விடைத்தாள் திருத்தல்களுக்கான கொடுப்பனவுகள் தொடர்பில் உபகுழுவின் பரிந்துரை கிடைத்துள்ளது!

### கல்வி அமைச்சு தெரிவிப்பு

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள்திருத்தும்பணியில் ஈடுபடுவோருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை அதிகரித்தல் தொடர்பிலான உப குழுவின் பரிந்துரை கிடைக்கப் பெற்றுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி உப குழுவின் பரிந்துரைகளை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து, அதற்கான 2➤

## போதைப்பொருள் பாவனைக்கு எதிரான நாள் இன்று ஜூன் 26 இல் அனுஷ்டிக்கப்படுகின்றது




போதைப் பொருள் பாவனை மற்றும் போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான நாள் இன்றைய தினமான ஜூன் 26 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. போதைப்பொருள் பிரச்சினை உலகளாவிய அளவில் பல உயிர்களை காவு கொண்டு வருகின்றது. இதனை கருத்திற் கொண்டே ஐக்கிய நாடுகள் சபை 1986 ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு ஜூன் 26 ஆம் திகதியையும் உலக போதைப்பொருள் பாவனை மற்றும் போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான நாளாக பிரகடனப்படுத்தியதையடுத்து 2➤

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

(ஜேவிபி) பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், "தேர்தல்கள் நெருங்கி வருவதால், இதுவரை ஆட்சியிலிருந்த தரப்பினர் பல்வேறு அவதூறான விடயங்களை பரப்பி வருகின்றனர். மறுபுறம் தேர்தல் நடைபெறுமா இல்லையா என்ற சந்தேகத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றனர். ரணில் விக்ரமசிங்ஹ உட்பட தேர்தலுக்கு பயப்படும் அனைவருமே ஜனாதிபதித் தேர்தலைத் தவிர்ப்பதற்கான வழிகள் குறித்தே சிந்திக்கின்றனர்.

முதலில், பொதுத் தேர்தலை நடத்துங்கள், ரணில் விக்கிரமசிங்ஹவுக்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் அவகாசம் கொடுங்கள் என கூறியவாறு அரசியலமைப்பின் சரத்துக்களை தந்திரமாக புறக்கணிக்கும் மார்க்கங்கள் குறித்தும் திட்டங்களை தீட்டுகின்றனர். ரணில் விக்கிரமசிங்ஹ, சஜித் பிரேமதாச ஆகியோர் தேர்தலை தவிர்க்க வேறு வழி இல்லாத நிலையிலேயே தேசிய மக்கள் சக்தி மீது அவதூறு பரப்பி வருகின்றனர்.

69 லட்சம் வாக்குகளுடன் ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷ தரப்பினர் இன்று நாலா திசையிலும் சிதறுபட்டுள்ளனர். ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்ற முடிவைக் கூட எடுக்க முடியாத நிலையில் ராஜபக்ஷ தரப்பினர் உள்ளனர். மொட்டு கட்சியின் ஒரு தரப்பினர் ரணிலுடன் இருக்கும்போது, மற்றொரு குழு மஹிந்தவுடன் உள்ளது, இன்னுமொரு குழு போக்கிடமின்றி சுற்றிவருகின்றது. ராஜபக்ஷக்களில் பலர் ரணிலிடம் தஞ்சம் அடைய ஆசைப்படுகிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்ஹ ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களின் பணத்தைச் செலவு செய்து நெறிமுறையற்ற வகையில் தேர்தல் சட்டங்களுக்கு எதிராகச் செயற்படுகின்றார். எம்.பி.க்களுக்கு கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கி மக்களுக்கு பத்து கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

சஜித் பிரேமதாச, ரணில் விக்கிரமசிங்ஹ, ராஜபக்ஷ ஆகியோருக்கு மக்கள் ஆதரவை திரட்ட முடியவில்லை, அதே வேளையில் தேசிய மக்கள் சக்தி நாட்டிலும் சர்வதேச அளவிலும் பெரும் ஆதரவுடன் முன்னேறி வருகிறது. திசைகாட்டியுடன் அனைத்து சக்திகளும் ஒன்று சேருகின்ற இந்த சந்தர்ப்பத்தில், ராஜபக்ஷ, ரணில், சஜித் எல்லோரும் ஒன்று சேர்ந்து தேசிய மக்கள் சக்தியை குறிவைத்து மிக அசிங்கமான முறையில் சேற்றை வாரி இறைக்கின்றனர்" - என்றார். (ரென-78)

## ஆசிரியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன் காரணமாக புறக்கோட்டை, ஒல்கொட் மாவத்தை மற்றும் அண்மித்த வீதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். மேலும் போராட்டம் காரணமாக லோட்டஸ் வீதியும் மூடப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்தில் சுமார் 5000 பேர் வரையில் கலந்து கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொழும்பு லோட்டஸ் வீதியில் ஆசிரியர், அதிபர் சங்கங்களின் போராட்டம் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை தாக்குதலை மேற்கொண்டதுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை ஆசிரியர், அதிபர் சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சுகயீன விடுமுறையை அறிவித்து ஆசிரியர், அதிபர்கள் ஒன்றிணைந்து இன்று கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக இன்று ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த நிலையில் இவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்

குறித்த போராட்டம் தொடர்பில் கொம்பனித்தெரு பொலிஸார் விடுத்த கோரிக்கைக்கு அமைய கோட்டை நீதவான் நீதிமன்றினால் தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)

## இந்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தம்மால் உருவாக்கப்பட்ட தொழிற்சங்க போராட்டம் வடக்கு மாகாணத்தில் வெற்றி அளித்துள்ளது என்றும் இதன் ஊடாக அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளை தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். அத்துடன் சுபோதினி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடையங்களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும், மேலும் நீண்ட காலமாக அதிபர் ஆசிரியர் இடையே இருக்கின்ற சம்பள முரண்பாடுகளை தீர்த்து அதன் ஊடாக மாணவர்களின் கல்வியியை மேம்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்ந்தும் தீர்க்கப்படாவிடத்து இவ்வாறான தொழிற்சங்க போராட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப செயலாளர் சுட்டி காட்டினார். (01)

## விடைத்தாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும், ஆசிரிய சேவையில் உள்ள ஆசிரியர்களுக்கு இதுவரை அமுலில் இருந்த 'மொடியூலர்' முறைக்கு மாற்று யோசனையாக அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்ட யோசனை குறித்தும் ஆணைக்குழுவினால் பரிசீலிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஆசிரியர் சங்கங்களுக்கு தெளிவுபடுத்தப்பட்ட பின்னர் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்ட மேற்படி யோசனை மீண்டும் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்படும் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, 2022 ஆம் ஆண்டை விட 2024 ஆம் ஆண்டளவில் கல்விக்கு அத்தியாவசியமான பயிற்சி புத்தகங்கள் மற்றும் உபகரணங்களின் விலைகளை குறைப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ரென-79)

## போதைப் பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உலக நாடுகள் இத்தினத்தை வருடாந்தம் அனுஷ்டித்து வருகின்றன.

உலகளவில், 35 மில்லியனுக்கும் அதிகமானோர் போதைப் பாவனைக்கு அடிமையாகியுள்ளதுடன் இவர்களில் அநேகமானோர் 18-25 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றது. போதைப்பொருள் பாவனையினால் உடல் ஆரோக்கியத்துடன் மன ஆரோக்கியமும் பெருமளவில் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாதல் இதய நோய், பக்கவாதம், எச்.ஐ.வி தொற்று ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகமாதல், நுரையீரல் புற்றுநோய், கல்லீரல்ஃ சிறுநீரக நோய், வாய் புற்றுநோய், லுகேமியா, உடல் எடை குறைவு, மனச்சோர்வு, நினைவாற்றல் குன்றல், தூக்கமின்மை, வன்முறை நடத்தை போன்ற மனநல பிரச்சினைகள் மற்றும் உடல் பாதிப்புகளுக்கு உள்ளாக வழிவகுக்கும் எனவும் எச்சரிக்கப்படுகின்றது. (ரென-77)

### ஜனாதிபதித் தேர்தலில்
# பொன்சேகாவின் ஆதரவு யாருக்கு?

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் முரண்பட்டுக் கொண்டிருக்கும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தற்போது சஜித்துக்கு எதிராகப் பிரசாரம் பண்ணத் தொடங்கியுள்ளார்.

கெசினோகாரர்களின் பணத்தை வைத்து பாடசாலைகளுக்குப் பொருட்கள் வழங்குபவர்களை நாட்டின் ஜனாதிபதியாக்கினால் நாடு அழிந்து விடும் என்று பொன்சேகா கடந்த நாடாளுமன்ற அமர்வில் சஜித்தை மறைமுகமாகப் போட்டுத் தாக்கியிருந்தார்.

இதன் மூலம் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்கப் போகின்றார் என்ற கேள்வி எழுகின்றது.

அவர், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவார் என்று ஒரு தரப்பும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஆதரவு வழங்குவார் என்று இன்னொரு தரப்பும் கருத்துக்களை முன்வைத்துள்ளன.

## ரயில் நிலையத்துக்கு அருகிலிருந்து பல்கலை மாணவன் சடலமாக மீட்பு

ஜா - எல ரயில் நிலையத்துக்கு அருகிலிருந்து பல்கலைக்கழக மாணவன் ஒருவர் நேற்று இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று ஜா - எல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்மை, சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஜயவர்தன புர பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பு - சிலாபம் ரயில் மார்க்கத்தில் பயணித்த ரயிலொன்றில் மோதி உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஜா - எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சாவகச்சேரி வைரவசுவாமி கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டு விழா





சாவகச்சேரி சங்கத்தானை அருள்மிகு வைரவசுவாமி கந்தசுவாமி கோவில் மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டு விழா 24 6 2024 இரவு ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. ஆலய பரிபாலன சபை தலைவர் பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர் கு சதாசிவமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வை ஆலய திருப்பணி சபை தலைவர் யாழ் இந்து கல்லூரி ஆசிரியர் ச சுகீரதன் நெறிப்படுத்தினார்

நிகழ்வில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ தேவ. பிரசன்னா குருக்கள் ஆசியுரை வழங்கினார் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் மலரின் வெளியீட்டுரை ஆற்றினார் யாழ்ப்பாண பல்கலைக கழக முன்னாள் நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி மங்கல விளக்கேற்றினார்

சின்ன நல்லூர் என்ற அடைமொழியால் சிறப்பிக்கப்படும் இந்த ஆலயம் பெரிய அளவில் புனரமைப்பு செய்யப்பட்டு கடந்த ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# பலாலி சர்வதேச விமான நிலையத்தில் சுற்றுலாத் தகவல் மையம் திறந்துவைப்பு




யாழ்ப்பாணம், பலாலி சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் வெளியேறும் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கான தகவல் தொடர்பு நிலையம் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸால் நேற்று (25) திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாப் பயணிகள் இலகுவாக பயணிக்க கூடிய வரலாற்று சிறப்புமிக்க இடங்கள், வழிபாட்டு தளங்கள் உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய சுற்றுலா வழிகாட்டி கையேடுகளை தகவல் தொடர்பு நிலையத்தில் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் வடக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களும் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகளுக்கான தகவல் தொடர்பு நிலையத்தை திறந்து வைத்ததன்பின்னர், விமான நிலைய செயற்பாடுகளை ஆளுநர் அவர்கள் பார்வையிட்டதுடன், விமான பயணிகளுடனும் கலந்துரையாடினார்.

சுற்றுலாப் பயணிகளுக்கான தகவல் தொடர்பு நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், சுற்றுலாப் பணியகத்தின் தலைவர், விமான நிலைய அதிகாரிகள் என பலரும் கலந்துச் சிறப்பித்தனர்.



# மிதி வெடி

வேலியே பயிரை மேஞ்ச கணக்கா உங்க கன சம்பவங்கள் நடக்குது பாருங்கோ..

“வெள்ளையும் சொள்ளையுமா” உத்தம வேசம் போட்டுக் கொண்டிருக்கிற கனபேர் உள்ளுக்க சூத்தையளாத் தான் இருக்கினம்... ஆனாலும் முகமூடி போட்டுக் கொண்டு ஒருத்தரும் கனகாலத்துக்குத் திரியேலாது தானே?

நான் இந்த முறை சொல்லப்போற விசியம் எங்கட தேசத்தின்ர வங்கியாளர்கள் பற்றியது.. ஒண்டுரெண்டு பேர் செய்யுற கீழ்த்தரமான வேலையளால ஒட்டுமொத்தமாப் பாக்கப் போனா. வங்கியள் காலங்காலமாக் கட்டி வளர்த்த பேருக்கும் களங்கம், அந்த வங்கிகளில வேலை செய்யுற எல்லாரையுமே கள்ளராகப் பார்க்க வேண்டியும் கிடக்கு.!

கொஞ்சக்காலத்துக்கு முன்னம் வங்கி ஒண்டில வேலை செஞ்ச கொஞ்சப்பேர் தங்களிட்ட நம்பி அடகு வைச்ச சனத்தின்ற நகையளில தாங்கள் குடும்பம் நடத்தின கதை அறிஞ்சிருப்பியள். அதால பல மக்கள் மனம் அழிஞ்சு போனதென்னவோ உண்மை தான்!

பலபேர் சேர்ந்து திருக்கூத்தாடிப் போட்டு, ஒருத்தனை மாட்டி விட்டுட்ட மிச்ச எல்லாரும் தப்பீற்றினம். கிட்டத்தட்ட 12 வருசமாக அடைவு வைச்ச அப்பாவிச் சனங்களுக்குத் தான் ஆப்பா முடிஞ்சதே தவிர, களவு செய்தவையும், துணை நிண்டவையும் வலு சுதந்திரமாத் திரியினம் எண்டு சனங்கள் கதைக்கினம். தங்கட பொறுப்பைச் சரியாச் செய்யாதவையளும் “சேஃவ்” ஆ “ரிட்டயர்” பண்ணிப் போயிற்றினம். இந்த வங்கி தங்கள நம்பி அடைவு வைச்ச சனத்துக்காக எதுவுமே செய்யேல்ல.

களவு செய்தவையக் காப்பாற்றின வங்கிகளும் இருக்கு, கையோட “கம்மாரிஸ்” அடிச்ச வங்கிகளும் இருக்கு.

கடைசிச் சண்டை நடந்த நேரத்தில குண்டு விழுந்து, “லொக்கர்”ல இருந்த எல்லாம் “டிஸ்ரோய்ட்” எண்டு கணக்குக் காட்டிப் போட்டு, கையில அம்பிட்ட எல்லாத்தையும், பையில அள்ளிக்கொண்டு போக, முல்லைத்தீவு, மாங்குளம் கிளைகளில அடைவு வைச்ச ஆக்கள் எல்லாருக்கும் சண்டை முடிஞ்சு வந்த கையோட சந்தைப் பெறுமதிக்கு நட்ட ஈடு குடுத்து தேசத்தின்ர (இலங்கை தேசத்தின்) வங்கி எண்டு பேரெடுத்த வங்கி ஒண்டு,

யாழ்ப்பாணத்தில நடந்த சில முறைகேடுகள போன கிழமை கையும் களவுமாப் பிடிச்சு தன்னை நிஷரூபிச்சிருக்குது.

பொதுவாப் பாத்தியள் எண்டால், களவெடுத்துக்கொண்டு வாறவங்களின்ர கள்ள நகை எண்டு தெரிஞ்சும் அடைவு வைக்கிறதும், “இமிடேசன்” நகையளையும், “கிலிற்று” களையும் பத்தரைமாற்றுத் தங்கம் எண்டு காட்டி சொந்த பந்தங்களிண்ர பேரில அடைவு வச்சுத் தாங்கள் எடுக்கிறதும், வாழ்க்கையில வர மாட்டினம் எண்டு தெரிஞ்ச இல்லாட்டி உயிரோட இல்லாத ஆக்களிண்ட கணக்குகளை “அக்ரிவேற்” பண்ணித் தங்களுக்குத் தெரிஞ்ச ஆக்களை வைச்சு “வித்றோ” பண்ணினதும் தான் நடக்கிறது.

ஆனா இங்க ஒரு வங்கியின்ர “மனேஜரா” இருந்த ஆள் ஒண்டு, முந்தி இருந்த கிளையளில தன்ர சொந்தம், பந்தங்களிண்ட பேரில “கப்பாசிற்றி”க்கு மேலால கடன் குடுக்கிற மாதிரி குடுத்து தன்ர கல்லாவை நிரப்பியிருக்குது.. வேற என்னென்ன நடந்துச்சோ தெரியேல்ல.. ஆனா, “பல நாள் கள்ளன் ஒரு நாள் மாட்டுவான்” எண்டு எங்கட மூதாதையர்கள் சும்மாவே சொன்னவை?

இடமாற்றம் பெற்று நகரத்தில உள்ள கிளை ஒண்டுக்கு வந்து கொஞ்ச நாளிலயே பாவம் ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தரைப் பலிக்கடா ஆக்கி இருக்கிறா... ஆதாரத்தோட பிடிபட்டதால அநேகமா “ரேமினேசன்” தான் போல கிடக்காம்.

ஆறு “ஆர்டிகல்” அளவுக்கதிகமான நிறையில அடைவு வைச்சு கைநிறையக் காசு எடுபட்டிருக்குது.. இன்னொருத்தர்ட பேரில வைச்ச அடைவுக்கு இந்தாள் பொறுப்பில்லை தானே? எண்டு யோசிக்கிறியளோ..? ஓம் பொறுப்பில்லத் தான. ஆனா இந்தாளிண்ட தொலைபேசியில இருந்து, அந்தாளிண்ட தொலைபேசிக்கு “என்னை மாட்டி விட்டுடாதே” எண்டு போட்ட “எஸ். எம். எஸ்” க்கு யார் பொறுப்பு?

உள்ளகக் கணக்காய்வு உள்ளதை உள்ளபடி சொல்லி இருக்குதாம். இப்ப “பூல்”ல இருக்க விட்டிருக்கிற ஆளுக்கு தலைமைச் செயலகத்தில இருந்து வரவேண்டிய கடிதத்துக்காக “வெயிற்றிங்”.!

இதே வங்கின்ர இன்னொரு கிளையில போலி நகையள நெருங்கின சொந்தக் காரரின்ர பேரில தன்ர கிளையில அடகு வைச்ச இன்னொரு “மனேஜர்”ம் மாட்டுப் பட்டுப் போயிருக்கிறதா தகவல். ஆனால், அவர் வங்கியில மாட்டுப் படேல்லப் பாருங்கோ-. வங்கிக்கு வெளியால உள்ள இன்னுமொரு தனியார் நிதி நிறுவனத்தில-.

வங்கில அடைவு வைச்சு மீளேலாத ஆக்களுக்கு, அடகு மீட்க காசும் தந்து, நகையச் சந்தைப் பெறுமதியில வாங்கிறம் எண்டு சொல்லி “பனையால விழுந்தவனை மாடேறி மிதிச்சது” கணக்கா “மடக்கிக் குத்தி” நகை வாங்கிற ஒரு நாலெழுத்து “கொம்பனி” ஒண்டு தான் இந்த “மனேஜர்” மாட்டுப்படக் காரணமாம்-.!

“ஆசை ஆரைத் தான் விட்டது” எண்டு சொல்லுறவை தானே? போலி நகையளைச் சொந்தக்காரன்ற பேரில 70 லட்சத்துக்கு அடைவு வச்சுக் காசை எடுத்துப் போட்டு, அந்த நகையள மீட்டெடுத்து உங்கட காசை எடுத்துப்போட்டு மிச்சக் காசைத் தாங்கோ எண்டு “போனிங் துண்டோட” போன சொந்தக்காரனையும், “கொம்பனி”க்காரனையும் வங்கிக்கு வரவழைச்சு அடைவை “ரிலீஸ்” பண்ணி விட்டுட்டார். சட்டப்படி பாத்தா அந்த “மனேஜர்” வங்கியோட “கேஸ்” இல்லாமல் விலக்குப்பட்டுட்டார்.

ஆனால் பாருங்கோ போலி நகைக்கு 70 லட்சம் காசு குடுத்து வாங்கின நாலெழுத்துக் “கொம்பனி”க்காரர் கொண்டு போய் உரசிப் பார்த்தால் அத்தனையும் போலி..

சொந்தக்காரனப் பிடிச்சு விசாரிச்சதால “மனேஜர்” மாட்டுப் பட்டுட்டார். “கொம்பனி”க்கு 70 ஐயும் உடனடியா “செற்றில்” பண்ணி அந்தாள் “கேஸ்” இல்லாமல் தப்பி விட்டுது.. ஆனாலும் காசோட பிளங்கிறவை அதி உச்ச நம்பிக்கையோட வேலை செய்ய வேணும் எண்டதுக்காகத் தானே வங்கியள் கனக்க வசதியள் செய்து குடுக்கிறது? அப்பிடியிருக்க அந்த நம்பிக்கையில மோசடி செய்யுறவைய எப்பிடி அந்த இடத்தில விட்டு வைக்க ஏலும்?

அந்த வங்கி போல அதிகாரிகளைக் காவாந்து பண்ணுறதில குறியா இருக்காமல் “தவிடு திண்டால் - தண்ணி குடிக்கத் தான் வேணும்” எண்டுமாப் போல நம்பிக்கைய வீணாக்கினவைக்குத் தண்டனை குடுக்கத் தான் வேணும் எண்டு மேலதிகாரிகள் குறியா நிக்கினமாம்..!

பார்த்திருப்போம்- என்ன நடக்குதெண்டு-. காய் முற்றினால் சந்தைக்கு வரத் தானே வேணும்?

நரமுனி

# மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கு தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் வாழ்த்து!

இந்திய மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவராக ராகுல் காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜய் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நடிகர் விஜய் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "காங்கிரஸ் மற்றும் கூட்டணிக் கட்சிகளால் போட்டியின்றி ஒருமனதாக எதிர்க்கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ராகுல் காந்திக்கு வாழ்த்துகள்.

நாட்டு மக்களுக்கு சேவையாற்ற மனமார்ந்த வாழ்த்துகள்" - என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் 18 ஆவது மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 99 தொகுதிகளில் வெற்றி பெற்று 10 ஆண்டுகளுக்கு பிறகு மக்களவையில் எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றுள்ளது.

காங்கிரஸ் கட்சி அங்கம் வகித்த இந்தியா கூட்டணியானது இந்தியா முழுவதும் 234 தொகுதிகளில் வெற்றி பெற்று வலுவான கூட்டணியாக மக்களவையில் உருவெடுத்துள்ளது. (04)







# காஸா பகுதியில் அரை மில்லியன் பலஸ்தீனியர்கள் பட்டினியில்!

## ஐ.நா. ஆதரவு மதிப்பீடு தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை ஒன்று, காஸா பகுதியில் சுமார் அரை மில்லியன் பலஸ்தீனியர்கள் பட்டினியால் வாடுவதாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பான அறிக்கையை மேற்கோள்காட்டி, இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தம் தொடருமானால், இந்த நிலை அதிக அபாய நிலையாக மாறும் என வெளிநாட்டு ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஆனால், மே மாதத் தொடக்கத்தில் இஸ்ரேல் தரைவழி நடவடிக்கையைத் தொடங்கியதிலிருந்து, ரஃபா எல்லை கடக்கும் பாதை மூடப்பட்டதும் ரஃபா நகரில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்ததால் தெற்கு மற்றும் மத்திய காஸாவில் உணவுப் பொருட்கள் மக்களுக்குக் கிடைப்பதில் கடும் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது. (04)

# கொழும்பு பேராயர் கர்தினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்திய – இலங்கை நல்லுறவைச் சீர்குலைக்க முயற்சி!

## தமிழ்நாடு சிவசேனா அமைப்பு குற்றச்சாட்டு



இந்திய - இலங்கை நல்லுறவைச் சீர்குலைக்கும் விதமாக கொழும்பு பேராயர் கர்தினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகை செயற்படுவதாக தமிழ்நாடு சிவசேனா அமைப்பின் மாநிலச் செயல் தலைவர் க.சசிகுமார் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கான கப்பல், விமான போக்குவரத்துகளை விரிவுபடுத்த இந்திய அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்து வருவதாக க.சசிகுமார் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே பாலம் அமைக்கப்பட்டால் இலங்கையின் இறையாண்மைக்கு பங்கம் ஏற்படுமென கர்தினல் மல்கம் தெரிவித்த கருத்தை வன்மையாக கண்டிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையின் சுதந்திரமும் பறிபோகும் என்றும் கர்தினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டிருந்தார்.

இது குறித்து பேசிய க.சசிகுமார் - வளமான, வலிமையான நாடாக இலங்கையை உருவாக்க வேண்டும் என்பதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பல்வேறு ஒப்பந்தங்களில் கையழுத்துட்டுள்ளதாகத் தெரிவித்தார். இந்திய அரசாங்கம் பல கோடி நிதியை இலங்கை அரசாங்கத்திற்கு ஒதுக்கியுள்ளதாக தமிழ்நாடு சிவசேனா அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. இதேவேளை, இந்திய அரசாங்கத்தினால் இலங்கையில் 10,000 பேருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் மற்றும் பல்வேறு திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்நிலையில் இந்திய - இலங்கை நல்லுறவைச் சீர்குலைக்கும் விதமாக, இலங்கையின் கத்தோலிக்க ஆயர் கர்தினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகை செயற்படுவதாக தமிழ்நாடு சிவசேனா அமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது. (04)

# கொழும்பு தேசிய வைத்தியசாலைப் பகுதியிலுள்ள 12 உணவு விற்பனையகங்களில் சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனை

மருதானை மற்றும் கொழும்பு மாநகர சபைகளின் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் நேற்று முன்தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலையைச் சுற்றியுள்ள 12 உணவு விற்பனை நிலையங்கள் சோதனையிடப்பட்டன.

அதன்படி, பொது சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் வகையில் உணவு விற்பனை செய்த விற்பனை நிலையமொன்றிற்கு எதிராக எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இரண்டு கடைகளுக்கு அறிவித்தல் அனுப்பப்பட்டு, இரண்டு உணவு வகைகளின் மாதிரிகள் ஆய்வக பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர் ஒருவர் தெரிவித்தார்.

பல உணவு விற்பனை நிலையங்களில் குப்பைகளை இடுவதற்கு முறையான குப்பைத்தொட்டிகள் இருக்கவில்லை எனவும் குறிப்பிட்ட அவர், பிரதம வைத்திய அதிகாரி கீத்திகா ரத்னவர்தனவின் மேற்பார்வையில் 12 பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் இரண்டு வைத்திய அதிகாரிகள் இந்த சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே, தமது கடைகளுக்கு முறையாக குடிநீர் வழங்காதது பெரும் பிரச்சினையாக இருப்பதாகவும், நகர சபையினர் மாத வாடகை வசூலிக்கின்ற போதிலும் அவர்கள் தமக்கு கடைகளை முறையாக அமைத்துத் தரவில்லை என அங்குள்ள வியாபாரிகள் குற்றம் சாட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெனா-80)

# சமூக வலைத்தளங்களின் ஊடாக இடம்பெறும் மோசடிகள் அதிகரிப்பு!

சமூக வலைத்தளங்கள் ஊடாக இடம்பெறும் மோசடிகள் அதிகரித்துள்ளதால் இது குறித்து பொதுமக்கள் மிக அவதானமாக இருக்குமாறு நாட்டின் கணினி அவசர பதிலளிப்பு பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, பேஸ்புக் மற்றும் வட்சப் போன்ற சமூக வலைத்தளங்கள் மற்றும் குறுஞ்செய்திகள் போன்றவற்றின் ஊடாக தகவல்களை அனுப்பி பொதுமக்களை ஏமாற்றும் முயற்சிகள் அதிகளவில் இடம்பெற்று வருவதாக கணினி அவசர பதிலளிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

குறிப்பாக தேசிய மற்றும் மத ரீதியான பண்டிகைக்காலங்களை இலக்கு வைத்து இவ்வாறான மோசடிகள் இடம்பெறுகின்றதாகவும் இதற்காக பிரபலமான வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் பல வர்த்தக நாமங்களும் போலியாக பயன்படுத்தப்படுகின்றதாகவும் குறித்த பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. ஆகவே, அறியாத நபர்களினால் அனுப்பப்படுகின்றன குறுஞ்செய்திகளில் காணப்படும் லிங்கை மக்கள் க்ளிக் செய்வதன் மூலம், இணைய மோசடிக்காரர்கள் மக்களின் தனிப்பட்ட விபரங்களைக் களவாடுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அவற்றைப் பயன்படுத்தி நிதி மோசடிகளில் ஈடுபடுவதுடன் சில தரப்பினர் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றிருப்பதாக அல்லது பரிசுகள் கிடைக்கப்பெற்றிருப்பதாகக் கூறி அவற்றைப் பெற்றுக்கொள்ள ஒருதொகை பணத்தை வைப்பிட வேண்டும் என்று அறிவுறுத்தி நிதி மோசடி செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அறியாத நபர்களிடமிருந்து கிடைக்கின்ற இவ்வாறான குறுஞ்செய்திகளை திறப்பதற்கு முன்னர், அவர்கள் குறிப்பிடுகின்ற நிறுவனங்களின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் ஊடாகவோ அல்லது தொலைபேசியில் தொடர்புகொள்வதன் ஊடாக தகவலின் உண்மைத் தன்மையை உறுதி செய்து கொள்ளுமாறும் மக்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை கடல் சுற்றாடல் கழிவு முகாமைத்துவ கலந்துரையாடல்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை ஆட்புல எல்லைக்குட்பட்ட கடல் சுற்றாடலின் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் இன்று மாநகர சபையில் நடைபெற்றது.

கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸின் அறிவுறுத்தலின் பிரகாரம் மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீமின் நெறிப்படுத்தலில் கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் அம்பாறை மாவட்ட உதவி முகாமையாளர் கே. சிவகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கடல் மற்றும் கடலோர பிரதேசங்களின் சூழல் பாதுகாப்புக்கு அச்சுறுதலாக காணப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

குறிப்பாக கடற்கரையை அண்மித்த பகுதிகளில் இயங்கி வருகின்ற தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரினால் ஏற்படும் சூழல் பாதிப்புகள், அதனால் பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதனை முகாமைத்துவம் செய்வதில் காணப்படுகின்ற சவால்கள் மற்றும் தீர்வுகள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

மேலும், அடுத்த கூட்டத்தில் இதற்கான தீர்வுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்வெதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மத்திய சுற்றாடல் அதிகார சபை, கல்முனை பிரதேச செயலகம், கரையோரம் பேணல் திணைக்களம் மற்றும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளும் பொலிஸ் மற்றும் கடற்படை அதிகாரிகளும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் தொழிற்சாலைகளின் உரிமையாளர்களும் பங்கேற்றிருந்தனர்.

# சதுரங்கப் போட்டியில் கற்பிட்டி அல் அக்ஸா 8 மாணவர்கள் மாகாண மட்டத்திற்கு தெரிவு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்,)

இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கம் கல்வி அமைச்சுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த பாடசாலை மாணவ மாணவிகளுக்கு இடையிலான புத்தளம் வலய சதுரங்கப் போட்டியில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் 8 மாணவ மாணவியர் வெற்றி பெற்று மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளனர்.



மேற்படி புத்தளம் வலய பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கப் போட்டி கடந்த 22 மற்றும் 23ஆம் திகதிகளில் புத்தளம் ஆனந்தா தேசிய கல்லூரியில் இடம்பெற்றது.

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் 13 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் எம்.ஏ.எம். ஆத்திப் 15 வயதுக்குற்பட்ட பெண்கள் பிரிவில் எம்.எஸ். எப். சபீஹா 2ஆம் இடத்தையும் 15 வயதுக்குற்பட்ட ஆண்கள் பிரிவில் எம்.ஏ.எம். ஆதில் ஹசன் ஐந்தாம் இடத்தையும் மற்றும் எம்.எம். மயிஸ் அஹமட் ஏழாம் இடத்தையும் 17 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் எம்.ஆர். ஆயிஷா மூன்றாம் இடத்தையும் 17 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் எம்.ஏ.எம். ஆஷிப் 2ஆம் இடத்தையும், எஸ்.டி. இத்தர்ஷனன் 3ஆம் இடத்தையும், எம்.எஸ்.எம். சியாப் நான்காம் இடத்தையும் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இம்மாணவர்களின் வெற்றிக்காக உறுதுணை புரிந்த ஆசியர்களான அன்பஸ், பைசல், றியாஜ் ஆசிரியைகளான சகீலா, ஹிசானா, அஸ்ரிபா, அமிறுன்நிசா ஆகியோருக்கு தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் பாடசாலையின் பிரதி அதிபர் எஸ். எப் சாஜினாஸ் தெரிவித்துள்ளார்.




# சங்கானை பஸ் தரிப்பிட சதுக்கத்தில் அம்மாச்சி உணவகத்தின் திறப்பு விழா



யாழ்ப்பாணம் சங்கானை பஸ் தரிப்பிட சதுக்கத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அம்மாச்சி பாரம்பரிய உணவகத்தை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ் நேற்று (25) திறந்து வைத்தார்.

அம்மாச்சி பாரம்பரிய உணவகத்தை திறந்து வைத்த ஆளுநர், உணவகத்தின் விற்பனை செயற்பாடுகளையும் ஆரம்பித்து வைத்ததுடன், வலிகாமம் மேற்கு பகுதி பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளையும் வழுங்கி வைத்தார். உள்ளூர் கலைஞர்கள் மற்றும் விவசாயிகள் இதன்போது கௌரவிக்கப்பட்டதுடன், வறிய குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழுங்கி வைக்கப்பட்டன .

இந்நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர்,

“மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் மக்களோடு இணைந்து பிரதேச சபைகள் செய்யற்பட வேண்டும். அதற்கமைய பல சிறப்பான வேலைத்திட்டங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாகவும், மாகாண சபையினூடாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாகாணத்தில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும். ஒவ்வொரு பிராந்தியங்களுக்குமான வெவ்வேறு தனித்துவங்கள் காணப்படுகின்றன.

எமது மண்ணின் தனித்துவங்களையும் பாரம்பரியங்களையும் நாமே பாதுகாக்க வேண்டும். யாழ்ப்பாண உணவுகளுக்கு வெளி பிரதேச மக்களிடமும், வெளிநாட்டு மக்களிடமும் அதிக வரவேற்பு காணப்படுகின்றது. அவற்றை தொடர்ந்தும் பேணி பாதுகாக்க வேண்டும். அம்மாச்சி பாரம்பரிய உணவகங்கள் ஊடாக தொடர்ச்சியாக மக்களுக்கான தரமான, சுவையான உணவுகள் வழங்கப்பட வேண்டும்” என தெரிவித்தார். (01)

# இந்திய மீனவர்களைப் பிடிக்கச் சென்ற கடற்படை வீரர் உயிரிழப்பு கைதுசெய்யப்பட்டவர்களுக்கு ஜூலை 8 வரை விளக்கமறியல்!



இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களை பிடிக்கச் சென்ற கடற்படை வீரர் உயிரிழந்த சம்பவம் தொடர்பான வழக்கில் கைதான பத்து இந்திய மீனவர்களும் மல்லாகம் நீதவானின் உத்தரவுக்கமைய ஜூலை 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களை பிடிக்கச் சென்ற கடற்படை வீரர் மோதலில் உயிரிழந்தார். இதன்போது 10 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டதோடு, ஒரு படகும் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது. கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 10 பேரும், கைப்பற்றப்பட்ட மீனவர்கள் வந்த படகும் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு கொண்டு வரப்பட்டு விசாரணை நடத்தப்பட்ட நிலையில், சட்ட நடவடிக்கைக்காக காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைதான இந்திய மீனவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறியமை மற்றும் ஆபத்தான விதத்தில் படகையோட்டி உயிரிழப்பை ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் அதனை எதிர்வரும் ஜூலை 8 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பரப்பில் நுழையும்போது கைது செய்யப்பட்டால் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் ஊடாக நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவதே வழமை என்கிற நிலையில், குறித்த சம்பவத்தில் உயிரிழப்பு ஏற்பட்டதால் நேரடியாக பொலிஸார் மூலம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (O1)

# மாங்குளத்தில் நடந்த கோர விபத்து மூவர் சம்பவ இடத்திலேயே மரணம்





மாங்குளம் - பனிக்கன்குளம் பகுதியில் ஏ9 வீதியின் 228 வது கிலோமீற்றர் பகுதியில் நேற்று இரவு 11 மணியளவில் இடம்பெற்ற கோர விபத்தில் மூவர் உயிரிழந்ததோடு இருவர் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அதிசொகுசுப் பேருந்து ஒன்று பழுதடைந்ததன் காரணமாக ஏ9 வீதியில் 228 வது கிலோமீற்றர் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்துள்ளது.

இதன்போது பேருந்தில் வருகை தந்தவர்கள் இறங்கி பேருந்தின் பின்புறமாக நின்று கொண்டிருந்த போது, அதே திசையில் வருகை தந்த லொறி ஒன்று குறித்த நபர்கள் மீதும் பேருந்தின் மீதும் மோதியுள்ளது.

இதில் வீதியில் நின்ற மூவர் தூக்கி வீசப்பட்டுப் பலியாகியுள்ளனர்.

லொறியின் சாரதி மற்றும் பேருந்தில் பயணித்த இன்னொருவர் என இருவர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

சம்பவ இடத்திற்குச் சென்ற மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.








## சீ.பீ.எல் போட்டிகள் நிறைவு!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்களுக்கிடையிலான 3 நாட்கள் கொண்ட சென்ட்ரலியன் பிரிமியர் லீக் 2024 சீசன் 2 கிரிக்கெட் சுற்றுப்போட்டி சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலய அதிபர் எம்.டி.ஜனூபர் தலைமையிலும் பழைய மாணவர்கள் அமைப்பின் ஏற்பாட்டிலும் கடந்த 21 ஆம் திகதி சம்மாந்துறை தேசிய பாடசாலையின் மைதானத்தில் ஆரம்பித்து வைக் கப்பட்டது. இச்சுற்றுப்போட்டிகளின் இறுதிப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (23) நடைபெற்றன.

சீனியர் சம்பியன், ஜூனியர் சம்பியன் என இரண்டு வெற்றிக் கிண்ணங்களும் ஜூனியர் சம்பியன் சுற்றுப்போட்டியில் 19 அணிகளும், சீனியர் சம்பியன் சுற்றுப்போட்டியில் 7 அணிகளும் பங்கு பற்றியிருந்தன.

இதில் சீனியர் சம்பியன் இறுதிச் சுற்றுப்போட்டிக்கு 2002 சா.த. சார்பாக குயிக் ரைடர்ஸ் அணியும் 2004 சா.த. சார்பாக ஈகிள் ஸ்பைக்கர்ஸ் அணியும், ஜூனியர் சம்பியன் இறுதிச் சுற்றுப்போட்டிக்கு 2008 சா.த. சார்பாக எய்ட் ஈகிள்ஸ் அணியும், 2014 சா.த. சார்பாக போர்ச்சுன் ஈகிள்ஸ் அணியும் விளையாடியிருந்தன.

இத் தொடரில் சீனியர் சம்பியனாக ஈகிள்ஸ்பைக்கர்ஸ் அணியும், ஜூனியர் சம்பியனாக எய்ட் ஈகிள்ஸ் அணியும் வெற்றி பெற்றன. அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களும் வீரர்களுக்குப் பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் பி.பரமதயாளனும், அதிதியாக அக்கரைப்பற்று வலயக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல் அப்துல் மஜீட்டும் பழைய மாணவர் அமைப்பின் செயலாளர் டொக்டர் ஏ.ஆர்.நியாஸ் அகமட், பாடசாலையின் பிரதி அதிபர் உட்பட பழைய மாணவர் அமைப்பின் நிர்வாக உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## சம்மாந்துறை பொதுமக்களுக்கு உரித்து - காணி ஆவணங்கள்



(நவாஸ்)

உரித்து - நிபந்தனையற்ற காணி அளிப்பு வழங்கும் நிகழ்வானது

நேற்று (25) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்குபற்றுதலுடன் அம்பாறையில் இடம்பெற்றது.

இதன் போது சம்மாந்துறை பிரதேசத்தை சேர்ந்த 85 பயனாளிகளுக்கு முதற்கட்டமாக ஆவணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா உட்பட காணி உத்தியோகத்தர்கள், மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து
உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே
புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து
வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp
மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!